12.08.2024
அசல் வழக்கு எண்: 65/2020

வா.சா.1 சாட்சி குணசேகரன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் பூர்வீக சொத்து இல்லை என்று 2ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் கட்சி செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதற்கு எந்தவொரு ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் ஓரளவிற்கு தெரியும். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் குருசாமி பெயரில் உள்ள மனைவரி தோராயப்பட்டா இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி குருசாமி என்பவர் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் என்றால் சரிதான். மேற்படி குருசாமி என்பவருடைய முன்னோர்கள் பெயரில் பட்டா இருந்ததாக ஆவணம் எதுவும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நத்தம் வகைப்பாட்டு சொத்தில் யார் அனுபவத்தில் இருக்கிறாரோ அவர்தான் உரிமையாளர் என்றால் சரிதான். தாவா சொத்து நத்தம் வகைப்பாட்டு சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாத்தா பெயரில் உள்ளது.

குருசாமிகோணார் என்பவர் 04.10.1995 ம் தேதி இறந்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் மேற்படி குருசாமிகோணார் 04.10.1995ம் தேதி இறந்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் நான் பிராதை சரியாக படிக்கவில்லை. 1ம்

பிரதிவாதிக்கு தாவா சொத்துபோக பல சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். அதில் பூர்வீக சொத்துக்களும் உள்ளது என்றால் அனைத்து சொத்துக்களும் பூர்வீக சொத்துக்கள்தான். நான் பாக பிரிவினை கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இதர சொத்துக்களை விட்டுவிட்டு தாவா சொத்துக்களை பொறுத்து மட்டும் பரிகாரம் கோரி இருப்பது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் முழுமையான பரிகாரத்தை கேட்காமல் உறுத்துக்கட்டளை மட்டும் கோரியிருப்பது ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியிடம் பணம் பரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்த விபரம் கிரையம் கொடுத்த சமயத்திலேயே தெரியும் என்றாலும் தற்போது பின்யோசனை செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.